### ஜனநாயகத்தைப் பாதுகாத்திட

# தமிழ்நாட்டு வாக்காளர்கள் ஆற்றியுள்ள பங்களிப்பு மகிழ்ச்சியளிக்கிறது!

## தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் ‘ட்விட்டர்’ பதிவு!




சென்னை, ஏப்.24-

ஜனநாயகத்தைப் பாதுகாத்திட தமிழ்நாட்டு வாக்காளர்கள் சரிவர ஆற்றியுள்ள பங்களிப்பு மகிழ்ச்சியளிக்கிறது என தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் முதல்வர் அவர்கள் தெரிவித்திருப்பதாவது :

**தமிழ்நாடு தேர்தல் 2026 ஜனநாயகத் திருவிழா : சாதனை வாக்குப்பதிவு; பாராட்டுக்குரிய மக்களின் பொறுப்புணர்வு!**

**எப்போதும் போல பெரிய அசம்பாவிதங்கள் ஏதுமின்றி அமைதியான முறையில் நடந்து முடிந்துள்ளது தமிழ்நாடு தேர்தல்.**

**84.69% என்ற சாதனை அளவில் வாக்களித்து, ஜனநாயகத்தைப் பாதுகாத்திடும் கடமையைத் தமிழ்நாட்டு வாக்காளப் பெருமக்கள் சரிவர ஆற்றியுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது.**

**சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் பலர் நீண்ட தூரம் பயணித்து வந்து வாக்களித்து விட்டு, இன்றிரவே மீண்டும் கிளம்பி, அவரவர் பணியாற்றும் ஊர்களுக்குச் செல்கின்றனர்.**

**“ஒரு வாக்குதானே” என எண்ணாமல், “ஒரு தலைமுறைக்கான தேர்தல் இது” என்ற நினைப்பே இந்த உந்துதலுக்குக் காரணமாக இருக்க முடியும். அத்தகைய பொறுப்புள்ள குடிமக்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகள்.**

**தமிழ்நாடு வாக்களித்துவிட்டது, மே 4 தமிழ்நாடு வெல்லும்!**

**#வெல்வோம்_ஒன்றாக!**

இவ்வாறு தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### நேற்று நடைபெற்ற – சட்டப்பேரவைத் தேர்தலில்

# தமிழ்நாட்டில் 84.51 சதவிகித வாக்குப்பதிவு!

சென்னை, ஏப்.24-

தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று, மாலை 6 மணியுடன் நிறைவடைந்த நிலையில், 6 மணி நிலவரப்படி 84.51 சதவிகித வாக்குகள் பதிவாகியுள்ளன.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று (23.04.2026) காலை 7 மணிக்குத் தொடங்கி நடைபெற்று வந்த நிலையில், மாலை 6 மணியுடன் நிறைவடைந்தது.

தமிழ்நாடு முழுவதும் அமைக்கப்பட்டிருக்கும் வாக்குச்சாவடிகளில், கடும் வெய்யிலையும் பாராமல் வாக்காளர்கள் வரிசையில் நின்று வாக்களித்தனர். மாலை 6 மணியுடன் வாக்குப்பதிவு நிறைவு பெற்றாலும், 6 மணிக்குள் வரும் வாக்காளர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டு இருந்தனர்.

தமிழ்நாட்டில் நேற்று மாவட்ட வாரியாக விவரம்... (சதவிகிதத்தில்)

அரியலூர் - 85.33
செங்கல்பட்டு - 84.26
சென்னை - 83.15
கோயம்புத்தூர் - 84.40
கடலூர் - 84.57
தருமபுரி - 89.87
திண்டுக்கல் - 88.29
ஈரோடு - 89.77
கள்ளக்குறிச்சி - 86.89
காஞ்சிபுரம் - 86.81
கன்னியாகுமரி - 75.46
கரூர் - 91.92
கிருஷ்ணகிரி - 84.65
மதுரை - 80.20
மயிலாடுதுறை - 81.01
நாகப்பட்டினம் - 85.35
நாமக்கல் - 89.46
பெரம்பலூர் - 85.17
புதுக்கோட்டை - 83.37
ராமநாதபுரம் - 76.18
ராணிப்பேட்டை - 88.58
சேலம் - 90.19
சிவகங்கை - 76.07
தென்காசி - 81.48
தஞ்சாவூர் - 80.07
நீலகிரி - 78.43
தேனி - 80.85
தூத்துக்குடி - 79.75
திருச்சிராப்பள்ளி - 85.04
திருநெல்வேலி - 77.44
திருப்பத்தூர் - 87.67
திருப்பூர் - 88.22
திருவள்ளூர் - 82.89
திருவண்ணாமலை - 88.06
திருவாரூர் - 82.86
வேலூர் - 87.74
விழுப்புரம் - 87.67
விருதுநகர் - 84.15

கரூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக 91.92 சதவிகிதமும் கன்னியாகுமரி மாவட்டத்தில் குறைந்தபட்சமாக 75.46 சதவிகிதமும் வாக்குகள் பதிவாகியுள்ளன.

# மேற்கு வங்கத்தில் 91.83 சதவிகித வாக்குகள் பதிவு!

கொல்கத்தா, ஏப்.24-

மேற்கு வங்க மாநிலத்தில் 152 தொகுதிகளுக்கான முதற்கட்ட வாக்குப்பதிவு நேற்று காலை 7 மணிக்கு வாங்குப்பதிவு தொடங்கியது. ஆனால், வாக்களிக்க மக்கள் ஆர்வாக முன்னதாக திரண்டனர். இதனால் வாக்குப்பதிவு சதவீதம் அதிகரித்த வண்ணம் இருந்தது.

இந்த நிலையில் மாலை 6 மணியுடன் வாக்குப்பதிவு நிறைவடைந்தது. 6 மணிக்கும் வாக்குச்சாவடிகளுக்கு வந்த வாக்காளர்களுக்கு டோக்கன் வழங்கப்பட்டு வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர். மாலை 5 மணி வரை சுமார் 90 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்த நிலையில், 6 மணி நிலவரப்படி 91.83 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.




புதுக்கோட்டை இராணியார் அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளியில் திருமயம் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளரும், அமைச்சருமான எஸ்.ரகுபதி தனது வாக்கினை பதிவு செய்தார்.



காங்கேயம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், கழக துணை பொதுச் செயலாளர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முத்தூர் நடுநிலைப்பள்ளியில் தனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினார்.




தமிழக சட்டமன்ற திருவெறும்பூர் தொகுதியில் மூன்றாவது முறையாக போட்டியிடும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தனது வாக்கைச் செலுத்துவதற்காக, திருச்சி வரகனேரியில் உள்ள டி.எஸ்.எம். (TSM) மேல்நிலைப்பள்ளியில் அமைந்துள்ள வாக்குச்சாவடியில், தனது மனைவி ஜனனியுடன் நீண்ட வரிசையில் காத்திருந்து தங்களது ஜனநாயகக் கடமையை ஆற்றினார்.




இராணிப்பேட்டை சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அமைச்சர் ஆர்.காந்தி தனது வாக்கை நவல்பூரில் உள்ள பள்ளியில் பதிவு செய்தார்.



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் ஏ.பி.நந்தகுமார் தனது ஊரான லத்தேரியில் வாக்கு பதிவு செய்தார்.




விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற வாக்குப்பதிவில் செஞ்சி ஒன்றியம் அங்கராயநல்லூர் அரசு தொடக்கப்பள்ளியில் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வாக்கினை பதிவு செய்தார்.



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி கலிங்கப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் ம.தி.மு.க முதன்மை செயலாளர் துரை வைகோ எம்.பி தனது வாக்கினை பதிவு செய்தார்.



விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா நேற்று கே.கே.நகர், ராஜா மன்னார் சாலையில் உள்ள அம்பத்தூர் லயன்ஸ் கிளப் பள்ளியில் தனது வாக்கினை பதிவு செய்தார்.




திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி சட்டமன்ற தொகுதி மீஞ்சூர் ஒன்றியம் வல்லூரில் உள்ள ஊராட்சி ஒன்றியம் பள்ளி வாக்குச்சாவடி மையத்தில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தனது வாக்கினை செலுத்தினார்.



திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி பூண்டி ஒன்றியம் பாண்டூர் ஊராட்சி டி.இ.எல்.சி, காபிஸ் மேல்நிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையத்தில் வேட்பாளர் வி.ஜி. ராஜேந்திரன் தனது வாக்கினை குடும்பத்தினருடன் செலுத்தினார்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி அடுத்த பட்டாபிராம் காமராஜ் புரத்தில் உள்ள தனியார் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையத்தில் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் ஆ.கிருஷ்ணசாமி தனது வாக்கினை குடும்பத்தினருடன் வாக்கு செலுத்தினார்.



திருத்தணி சிஎஸ்ஐ பள்ளி வாக்குச்சாவடி மையத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்டம் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி வாக்கு செலுத்தினார்.



ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மோளக்கவுண்டம் பாளையம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் குடும்பத்துடன் சென்று தனது வாக்கினை பதிவு செய்தார்.



ஈரோடு வீரப்பன்சத்திரம் வாக்குச்சாவடியில் மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற கூட்டணி கட்சிகளின் வேட்பாளர் சா.செந்தில்நாதன் தனது குடும்பத்துடன் சென்று தனது வாக்கினை பதிவு செய்தார்.



ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளரும் , கோபி சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் என்.நல்லசிவம் தனது குடும்பத்துடன் சென்று குள்ளம் பாளையம், அரசு உயர்நிலைப் பள்ளி வாக்குச்சாவடி எண் 129 ல் தன்து வாக்கை பதிவு செய்தார்.



கழக மாற்றுத்திறனாளிகள் அணி மாநில தலைவரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில தலைவர் ரெ.தங்கம் தனது துணைவியாரும், சென்னை தென்மேற்கு மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் திருமதி சரிதா தங்கம் ஆகியோர் தியாகராயர் நகர் பகுதி சி.ஐ.டி. நகரில் வாக்களித்து ஜனநாயக கடமை ஆற்றினர்.